# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (103) பொருளியல்

பெரும்பாலான மாணவர்கள் கணிசமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் பொருளியல் வினாத்தாளிற்கு விடையளித்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. இருப்பினும், முழுமையாக எடுத்துப் பார்க்கும் போது, பரீட்சார்திகள் வினாக்களுக்கு விடையளிக்கும் போது சில தவறுகள் விடப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

ஆகவே, ஆய்வின் போது பரீட்சகர்களால் அடிக்கோடிட்டு காட்டப்பட்ட சில முக்கிய அவதானிப்புக்கள் பின்வருமாறு:

## <u>பகுதி A</u>

**வினா இல. 01**

இவை நோக்கச் சோதனை வினாக்களைக் கொண்ட கட்டாய வினாவாகும். வினா 1.1 தொடக்கம் 1.10 பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியதாகும். இந்த பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கியிருந்தனர்.

பின்வருவன ஒவ்வொரு உப பிரிவிலும் பரீட்சார்திகளால் வழங்கப்பட்ட விடைகளிலுள்ள பொதுவான வழுக்கள் மற்றும் குறைபாடுகள் ஆகும்:

**1.1** உற்பத்திக்கான வழங்கள் தொடர்பான அறிவினை சோதிக்கும் நோக்கில், காணிக்கான வெகுமதி வினவப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் “வாடகை என சரியான பதிலளித்துள்ளனர்.

**1.2** நியம பொருளாதாரக் கூற்று தொடர்பான அறிவினை சோதிக்கும் நோக்கில் இவ்வினா வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறான விடையினை வழங்கியதால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**1.3** இது ஒரு செய்முறை வினாவாகும். மத்திய வங்கி அறிக்கை மற்றும் ஏனைய பாட சம்பந்தமான புத்தகங்களை படிக்காததன் காரணமாக தவறான விடையினை வழங்கியதால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**1.4** இவ்வினாவானது பொருளாதாரத்தின் மத்திய பிரச்சனையை கருத்தில் கொள்வதால் பல பரீட்சார்த்திகள் தவறான விடையினை வழங்கியதால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**1.5** இவ்வினா சந்தை மற்றும் நுகர்வோர் நடத்தையினை நோக்கியதாக இருப்பினும் பல பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கி புள்ளிகளை பெறத் தவறியுள்ளனர்.

**1.6** இவ்வினா கேள்விக்கான நெகிழ்ச்சியினை அளவிடுவதற்காக கொடுக்கப்பட்ட வினாவாகும். பல மாணவர்கள் தவறான விடையினை வழங்கியதால் புள்ளிகளை பெறத் தவறியுள்ளனர். இதற்கு குறைந்த எண்ணக்கையிலான மாணவர்கள் மட்டுமே இதற்கான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**1.7** இவ்வினா சந்தைப்படுத்தல் செயல்பாடுகளில் அரசின் தலையிடுகள் பற்றிய பரீட்சாத்திகளின் அறிவை சோதிக்கும் நோக்குடையது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு சரியான விடையினை வழங்கி புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**1.8** அளவுத்திட்ட விளைவு கொள்கை தொடர்பான அறிவினை சோதிப்பதற்கு வழங்கப்பட்ட இவ்வினாவிற்கு பொருத்தமான விடைகளை வழங்கியதன் மூலம் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**1.9** சந்தைக் கட்டமைப்பின் இயல்புகளை சோதிக்கும் இவ்வினாவிற்கு பெரும்பாலான பரீட்சார்திகள் மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

**1.10** இவ்வினாவானது வணிகச்சுற்று தொடர்பான விளக்கத்தை சோதிப்பதோடு பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு சரியாக விடையளித்துள்ளனர்.

**1.11** கேள்வியின் விலை நெகிழ்ச்சிக் குணகத்தின் செய்முறை முக்கியத்துவத்தை பற்றிய அறிவினை அளவிடுவதற்கு கொடுக்கப்பட்ட வினாவிற்கு "நேர்மறை" எனப் பதிலளித்து பெரும்பாலான பரீட்சாரத்திகள் வெற்றியீட்டியுள்ளனர்.

**1.12** இவ்வினாவானது குறுங்காலம் மற்றும் நீண்ட காலத்தில் சந்தைக் கட்டமைப்பின் இயல்புகள் மற்றும் கட்டமைப்பின் நடத்தை பற்றி வினவப்பட்டுள்ளது. போதிய விளக்கமின்மை காரணமாக பல பரீட்சார்திகள் தவறான விடையினை வழங்கி குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர். சரியான விடையானது தனியுரிமைப் போட்டி ஆகும்.

**1.13** நாட்டினது பண வழங்கலைப் பரீட்சித்த இவ்வினாவிற்கு பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்துள்ளனர்.

**1.14** அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனை தொடர்பான விளக்கத்தினை பரீட்சிப்பதற்கு வழங்கப்பட்ட இவ்வினாவிற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் "சரி" என சரியான விடையை இனங்கண்டு குறித்துள்ளனர்.

**1.15** நுண்பாகப் பொருளியில் மற்றும் பேரினப்பொருளியில் பற்றி கேட்கப்பட்ட இவ்வினாவிற்கு பல மாணவர்கள் வெற்றிகரமாக பதிலளிக்கவில்லை.

**1.16** விலை மற்றும் கேள்விக் கணியத்திற்கிடையான எதிர்மறை தொடர்பை விளக்கும் வருமான விளைவு பற்றிய வினாவிற்கு சில பரீட்சார்திகள் வழங்கிய விடைகளில், கேள்விக் கொள்கைக்கான காரணங்களை வருமான விளைவாக எழுதி மதிப்பெண்களை பெற்றிருக்கவில்லை.

**1.17** தெரிவு மற்றும் சந்தர்ப்பச் செலவுக்கிடையிலான வேறுபாட்டுக்கான இவ்வினாவிற்கு பல பரீட்சார்திகள் மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

**1.18** இலங்கை மத்திய வங்கியின் இரண்டு பிரதான தொழிற்பாடுகளை பற்றி எழுதும் போது சில பரீட்சார்திகள் மத்தியவங்கியின் தொழிற்பாடுகள் பற்றி தெளிவான விளக்கத்தை கொண்டிருக்கவில்லை.

**1.19** பெரும்பாலான பரீட்சார்திகள் சமபயன் விளைவு பற்றி குறைந்த விளக்கத்தை கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருந்தது. புல மாணவர்கள் எந்தவொரு புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை.

**1.20** நிலைபேறான அபிவிருத்தியின் பொதுவான அறிவு மற்றும் விளக்கத்துடன் பல மாணவர்கள் சரியான பதில்கள் மற்றும் ஓரளவு பொருத்தமான பதில்களை எழுதி குறைந்தது ஒரு புள்ளியினையேனும் பெற முயன்றுள்ளனர்.

## <u>பகுதி B</u>

**வினா இல. 02**

**(a)** **(i)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கியுள்ளனர்.

**(ii)** இருப்பினும், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் நுகர்வுப் பொருட்களின் வழங்கல் மீது அரசாங்கத்தால் ரூ.30 இனை அலகுக்கான வரியாக விதித்த பின்னர் புதிய சமநிலை விலை மற்றும் கணியத்தை சரியாக கணிப்பிட முடியாமையை அவதானிக்க முடிந்தது. இது இப்பகுதியின் மீதான குறைந்த அறிவினை காட்டுகின்றது.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் நுகர்வோர் சமநிலைக்கு பதிலாக சந்தைச் சமநிலையை தவறாக விளங்கி விடைகளை வழங்கியுள்ளனர்.

**வினா இல. 03**

**(a)** பொருளாதாரப் பொருள்கள் மற்றும் பொருளாதாரமற்ற பொருள்கள் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. பல மாணவர்கள் இரு பொருட்களுக்குமிடையிலான வேறுபாட்டை சரியாக வழங்கியிருப்பினும் சில பரீட்சார்த்திகள் யாரால் அல்லது எந்த வளங்களுக்கான குழக்கள் என்ற அடிப்படையில் இரண்டு பொருட்களுக்குமான வேறுபாட்டை வழங்கியிருக்கவில்லை.

**(b)** சராசரி மாறும் கிரயத்திற்கு பெரும்பாலான மாணவர்கள் தவறான விடையினை வழங்கியுள்ளனர்.

**(c)** இருப்பினும் சில பரீட்சார்த்திகள் எல்லைக் கிரயம் மற்றும் எல்லை வருமானம் பற்றிய இவ்வினாவிற்கு வெற்றிகரமாக விடையளித்துள்ளனர். உற்பத்தி நடவடிக்கைகளில் கிரயத்தின் நடத்தை தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவினை சோதிப்பதற்கு இவ்வினா வழங்கப்பட்டுள்ளது. சில பரீட்சார்திகள் எல்லைக்கிரய எண்ணக்கருவை தவிர்த்து விடையளித்துள்ளனர்.

**வினா இல. 04**

இவ்வனாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் பெரும்பாலான பரீட்சார்திகள் சரியான விடையினை வழங்கியுள்ளனர். பெரும்பாலானோர் நடைமுறையைக் கொண்டு இவ்வினாவிற்கு விடையளிக்க முயற்சித்துள்ளனர்.

**வினா இல. 05**

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் டொலர்களின் கேள்விக்கான காரணங்களை சரியாக வழங்கியுள்ளனர்.

**(b)** சில பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு சரியாக விடையளித்திருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக எண்ணக்கருவை விளங்கிக் கொண்டு பூரண நன்மையினை கணித்திருக்கவில்லை என்பதை காட்டுகின்றது.

**(c)** வங்கிக் கடன் கொடுப்பனவு, கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு போன்ற சென்மதிநிலுவையில் பதியப்படக்கூடிய நடவடிக்கைகளை எழுதாமையின் காரணமாக பல மாணவர்கள் உரிய மதிப்பெண்களை பெற்றிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தங்களது விடயங்களை மிகத் தெளிவாக வெற்றிகரமாக முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

**(A)** **(a)**

**(i)** சந்தை விலையில் மொத்த உள்நாட்டு செலவினங்களை இனங்காண்கையில் சில மாணவர்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தகவல்களை உள்ளடக்கியிருந்தனர். இதனால் முழு மதிப்பெண்களையும் பெற முடியவில்லை.

**(ii)** சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை இனங்காண்கையில் சில மாணவர்கள் இருப்பு மாற்றம் மற்றும் உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தனர். இதனால் முழு மதிப்பெண்களையும் பெற முடியவில்லை.

**(iii)** சந்தை விலையில் மொத்த தேசிய வருமானத்தை இனங்காண்கையில் சில மாணவர்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தகவல்களை மீண்டும் உள்ளடக்கியிருந்ததுடன் தேறிய வெளிநாட்டு மூல வருமானத்தை சீராக்கியிருந்தனர். இதனால் முழு மதிப்பெண்களையும் பெற முடியவில்லை.

**(b)** தேசிய வருமானக் கணிப்பீட்டில் பல மாணவர்கள் அடிப்படை விலையினை சரியாக முன்னிலைப்படுத்தி இருக்கவில்லை. பரீட்சார்த்திகள் அடிப்படை விலையின் எளிதான எண்ணக்கருவின் சிறந்த விளக்கத்தை கொடுக்க வேண்டும்.

**(B)** இரண்டு பேரினப் பொருளியல் கொள்கையினை விளக்கவேண்டி இருப்பினும் பல பரீட்சார்த்திகள் அதிகமாக விளக்கியிருந்தனர். கொடுக்கப்பட்ட வினாக்களை அறிந்திராமை மற்றும் ஒழுங்காக வலியுறுத்தாமையின் காரணமாக இவை இடம்பெற்றுள்ளது. சில பரீட்சார்த்திகள் இரு இலக்குகளை மட்டும் மிகத்தெளிவாக பெயரிட்டுள்ளனர்.

**(C)**

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் மீண்டுவரும் செலவினத்தை சரியாக விளக்கி பூரண மதிப்பெண்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

**(b)** மீண்டுவரும் செலவினத்தின் இரண்டு பிரதான வகைகளைக் குறிப்பிடுமாறு இவ்வினா கொடுக்கப்பட்டுள்ளது. சில பரீட்சார்த்திகள் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மீண்டுவரும் செலவினத்தின் பிரதான வகைகளாக மீண்டெழும் மாற்றல்கள் மற்றும் மானியங்கள் மற்றும் வட்டிக்கொடுப்பனவு என எழுதியிருந்த போதிலும் சில மாணவர்கள் மூன்று பிரதான செலவுகளின் வகைகள் மற்றும் உப வகைகளுக்கிடையான செலவுகளின் வகைகளை குறிப்பிட்டு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் திறன் மட்டத்தை முன்னேற்ற கருத்தில் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புாடத்திட்டத்தை முழுமையாக கற்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கவனம் செலுத்துதல்.

**(2)** வினாவினை தெளிவாக வாசிப்பதுடன் நேரடி விடை எதிர்பார்க்கும் வினாவிற்கு தேவையற்ற விளக்கங்கள் கொடுப்பதை தவிர்த்தல்.

**(3)** ‘‘செயல் வினைச் சொல் செவ்வை நிரல்’’ வரைவிலக்கணத்துடன் வினாத்தாளில் இணைக்கப்பட்டுள்ளதுடன் OTQs தவிர்ந்த ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றும் செயல் வினைச் சொல்லுடன் ஆரம்பிக்கின்றது. பரீட்சார்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் வரைவிலக்கணத்திற்கமைய வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**(4)** விசேடமாக பாடப்புத்தகம், நூல்கள், கையேடுகள், புத்தகங்கள், மத்தியவங்கி ஆண்டறிக்கை மற்றும் பாடத்துடன் தொடர்படைய ஏனையவற்றையும் படித்தல்.

**(5)** விடையளிக்கும் போது தேவைப்படும் அடிப்படை கோட்பாடுகளை சரியாக அடையாளம் காண்பதற்கான திறனை விருத்தி செய்தல்.

**(6)** கையெழுத்து வாசிக்ககூடிய வகையில் இருப்பதோடு வினா இலக்கங்களை சரியான முறையில் தெளிவாக எழுத வேண்டும்.

**(7)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(8)** அறிவு மற்றும் அனுபவத்தினை விருத்தி செய்ய முன்னைய வினாத்தாள் மற்றும் விடைத்தாளை ஆய்வு செய்தல்.

**(9)** பொருளியல் கோட்பாடுகளின் சரியான விளக்கத்தை பெறுவதன் மூலம் ஒவ்வொரு கோட்பாடுகளுக்குமான வித்தியாசத்தை ஒப்பீடு செய்யும் திறனை வளர்தல்.

**(10)** சுரியான நோ முகாமைத்துவம் முக்கியமானது.

**(11)** விடைத்தளை கையளிக்கும் முன்னர் வினா இலக்கங்களை மீள சரிபார்த்தல்.

**(12)** நும்பிக்கையுடன் பரீட்சையில் அமர்தல் மற்றும் சிறந்த பெறுபேற்றுக்கான அதிகபட்ச எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்.

- * * * -